# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● அக்டோபர் 15 2022 | Weekly E-paper ● October 15, 2022





## ஆரியப் பண்பாட்டுக் கலாச்சார எதிர்ப்பு

விடுதலை இராசேந்திரன்

## உண்மையைச் சொன்ன ஒன்றிய அமைச்சர்!

தலையங்கம்

## ஒருமைப்பாட்டைக் குலைக்கும் அமித்ஷா பரிந்துரை!

பொள்ளாச்சி மா. உமாபதி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● அக்டோபர் 15 2022    Weekly E-paper ● October 15, 2022


# பராசக்தியோடு பிறந்தேன்!

சுப.வீரபாண்டியன்

10 ஆண்டுகளுக்கு முன்பு என் பிறந்தநாள் ஒன்றில் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தேன். "எந்த ஆண்டு நீ பிறந்தாய்?" என்று கேட்டார். 1952 என்று சொன்னேன். அடுத்த நொடியே, "ஓ.... பராசக்தியோடு பிறந்தவனா நீ?" என்று கேட்டுச் சிரித்தார்.

பராசக்தியோடு பிறந்தேன். பராசக்தி ஊட்டிய உணர்வில் வளர்ந்தேன் என்று நினைத்துக் கொண்டேன்.

திராவிட இயக்கத்திலிருந்து முதலில் திரைப்படத் துறைக்குள் நுழைந்த பெருமை புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கே உரியது. அவரைத் தொடர்ந்து அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஜலகண்டபுரம் கண்ணன் என்று பலரும் வரிசையாக அடி எடுத்து வைத்தனர். கலைத் துறையைக் கைப்பற்றி, சமூகநீதி, பகுத்தறிவு, பெண் விடுதலை முதலான பல கருத்துகளை அதன் வழி மக்களுக்குக் கொண்டு சென்ற பெருமை திராவிட இயக்கத் தலைவர்களையே சாரும்!




அந்தப் படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று அன்று முதலமைச்சராக இருந்த ராஜாஜிக்கு அதிகாரி ஒருவர் எழுதிய கடிதம், பெரியார் முழக்கம் ஏட்டில் சென்ற ஆண்டு வெளிவந்திருந்தது. அந்த அளவிற்கு வரவேற்பையும் எதிர்ப்பையும் எதிர்கொண்ட ஒரு திரைப்படம் பராசக்தி.

அந்தப் படம் வெளிவந்து எழுபது ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. ஆனால் இன்று வரையில் அந்தப் படம் ஏற்படுத்திய அதிர்வலைகள் நம் காதுகளில் விழுந்து கொண்டே இருக்கின்றன.

கலைத்துறையில் திராவிட இயக்கம் கால் வைத்த போது அண்ணாவும், கலைஞரும் கூத்தாடிகள் என்று கேலி செய்யப்பட்டனர். கூத்தாடிகள் இல்லை அவர்கள் கலைஞர்கள் என்று பேச வைத்தவர்கள் அறிஞரும் கலைஞரும்தான்.

திராவிட இயக்கம் திரைப்படத் துறைக்குள் வந்த பிறகுதான், கலைத்துறைக்கு ஒரு கம்பீரமும், மக்களிடையே ஒரு மதிப்பும் ஏற்பட்டன என்பது மிகை இல்லை!

திராவிட இயக்கக் கருத்துகளைத் தாங்கிப் பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன என்றாலும், மூன்று திரைப்படங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. வேலைக்காரி, பராசக்தி, ரத்தக்கண்ணீர் ஆகிய மூன்று படங்களே அவை!

கடவுள், புராணக் கதைகளை மட்டுமே பேசிக் கொண்டிருந்த தமிழ்த் திரையுலகம், பிறகு ராஜா ராணி கதை பற்றி பேசத் தொடங்கியது. சாதாரண மக்களைப் பற்றி - அதிலும் உழைக்கும் மக்களைப் பற்றிப் பேசிய முதல் படம் வேலைக்காரி அல்லவா!

1949 ஆம் ஆண்டு அப்படம் வெளிவந்தது. உழைப்பவர்களிடமும் கூட ஆணாதிக்கம் இருந்த, இருக்கின்ற சமூகத்தில் வேலைக்காரி என்று ஒரு பெண்ணின் பெயரைத் திரைப்படத்தின் பெயராக வைப்பதற்கு எத்தனை துணிச்சல் வேண்டும்! அந்தத் துணிச்சல் அண்ணாவிடம் இருந்தது.

அதேபோலத்தான் 1952 ஆம் ஆண்டு ஒரு தீபாவளி நாளில் வெளிவந்த பராசக்தியும் சமூகப் புரட்சிக்கு வித்திட்ட படம் என்று கூற வேண்டும். அப்படம் வெளியான நாள் 1952 அக்டோபர் 17.

இன்றைக்கு நாம் அதனை ஒரு படமாகப் பார்க்கலாம். ஆனால் அன்றைக்கு அது ஒரு சமூகப் புரட்சி!

திரையரங்குகளில் நடிகர்கள் பெயர் வரும்போது மட்டுமே கேட்டுக் கொண்டிருந்த கையொலிகள் முதன்முதலாக அப்படத்தில் வசனகர்த்தாவிற்கும் கேட்கத் தொடங்கின! திரைப்படப் பாடல் புத்தகங்கள் மட்டுமே விற்றுக் கொண்டிருந்த காலத்தில், முதன்முதலாக வசனப் புத்தகங்கள் விற்கத் தொடங்கின.

வரும் 17ஆம் தேதி பராசக்தியை நினைவு கூர்ந்து, முகநூல்களில், சமூக வலைத்தளங்களில் நண்பர்களே கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். நேற்றே தோழர் கோவி.லெனின் அதனைத் தொடக்கி வைத்துள்ளார்.

இந்தச் சமூகத்தை மாற்றுவதற்கு இன்னும் நூறு பராசக்திகள் தேவைப்படுகின்றன! கலைஞரையும், பராசக்தியையும் தமிழகம் கொண்டாடட்டும்!

●



**பெருமைக்குரிய வரலாறு படைத்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்கும் தமிழக முதல்வரை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம்.**

ஆசிரியர்,
கருஞ்சட்டைத் தமிழர்

# திராவிடம் – சமஸ்கிருத ஆரியப் பண்பாட்டுக் கலாச்சார எதிர்ப்பு

**தோழர் விடுதலை இராசேந்திரன்,** பொதுச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்

தமிழ்நாட்டு ஆளுநர் ஆர் என் ரவி அவ்வப்போது பல சரவெடிகளைக் கொளுத்திப் போட்டுக் கொண்டே இருக்கிறார். அவருக்கு வரலாற்றைப் பற்றிய சரியான புரிதலும் இல்லை, தமிழ்நாட்டைப் பற்றிய புரிதலும் இல்லை. ஏதோ தமிழ்நாட்டிலேயே பிறந்து, வளர்ந்து, தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரத்தை எல்லாம் கரைத்துக் குடித்தாற் போல் பேசி வருகிறார். ஆளுநர் மாளிகையில் இருந்து தமிழகத்தில் தத்துவ விதைகளைத் தூவிக் கொண்டிருக்கிறார். ஆளுநரிடம் அறிவுரை கேட்கிற அளவிற்குத் தமிழ்நாட்டில் தத்துவ வறட்சி நிலவவில்லை.

அண்மையில் அவர் கொளுத்திப்போட்ட ஒரு சரவெடி என்னவென்றால், “திராவிடம் என்பது நான்கு மாநிலங்களையும் உள்ளடக்கியது. ஆனால் இவர்கள் தமிழ்நாட்டை மட்டும் பேசுகிறார்கள்” என்பதாகும். இதற்குமுன் பாரதக் கலாச்சாரம் பற்றிப் பேசினார்கள். இந்தியா என்பதாக ஒன்றுமில்லை, பாரத தேசம் என்று சொன்னார்கள். தற்போது திராவிடத்தைப் பற்றிய பெரிய வியாக்கியானத்தைக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

‘திராவிடம்’ என்பது தமிழ்நாட்டில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது பற்றிய வரலாற்றுப் புரிதல் அவரிடம் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தபோது தமிழ்நாட்டோடு சேர்ந்து ஆந்திராவின் ஒரு பெரும் பகுதி, கர்நாடகாவில் ஒரு சிறிய பகுதி, கேரளாவின் ஒரு பெரும் பகுதி சேர்ந்து சென்னை மாகாணம் என்று அறிவிக்கப்பட்டது. மொழி வழி மாநிலங்கள் பிரிந்த பிறகு இந்தப் பகுதிகள் எல்லாம் பிரிந்து, தமிழ்நாடு ஒரு மாநிலமாக ஆனது. திராவிட இயக்கம் திராவிடத்தை ஏன் பேசியது என்று சொன்னால், மெட்ராஸ் பிரசிடென்சி என்று சொல்லப்படுகிற பகுதியில் ஆந்திரா, கேரளா ஆகிய பகுதிகளும் இருந்ததால், அவர்களையும் உள்ளடக்கிய மெட்ராஸ் பிரசிடென்சிக்குத் தனி சுதந்திரம் வேண்டும், அதாவது இந்தியாவோடு சேராமல் நாங்கள் தனியாக இருந்து கொள்கிறோம் என்ற கோட்பாட்டில் ‘திராவிடம்’ என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள்.



மொழி வழி மாநிலங்கள் பிரிந்ததற்குப் பிறகு பெரியார் , மொழி வழி மாநிலங்கள் பிரிந்தது நமக்கு நல்லதுதான், மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் மனுவாதத்தில் ஊறிப் போனவர்கள். அதனால் அவர்கள் போனதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை என்று சொன்னார். தமிழ்நாடு மட்டும் தனி நாடாக இருக்க வேண்டும் என்பது போன்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்தார்.

அண்ணாவைப் பொருத்தமட்டில், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு நான்கு மாநிலங்களையும் ஒரே நாடாக உருவாக்கி அதற்குப் பெயர் ‘திராவிட நாடு’ என்று அவர் சொல்லவில்லை. ‘திராவிட நாடு’ கோட்பாடு என்பது, நான்கு மாநிலங்களும் மொழி வழியாகத் தனித்தனி மாநிலங்களாக இருக்க, திராவிடர்–ஆரிய எதிர்ப்பு என்ற இன வழியில் ஒன்றுபட்டு நிற்பது. ஆரியத்திற்கு எதிரான குறிச்சொல் திராவிடம். மொழி வழியில் நான்கு மாநிலங்களாகப் பிரிந்து இன வழியில் ‘திராவிடர்’ என்கிற வகையில் ஒன்றாக இணைந்த ஒரு கூட்டமைப்பு– திராவிடக் குடியரசு, திராவிடக் கூட்டாட்சி - அமைக்க வேண்டும். அந்தக் குடியரசில் விரும்புகிற மாநிலங்கள் பிரிந்து போகலாம். பிரிந்து போகிற உரிமையுள்ள ஒரு கூட்டாட்சி என்பதுதான் அண்ணா முன்வைத்த திராவிட நாடு. எல்லா மாநிலங்களையும் ஒன்றிணைத்து, ஒரே நாடு என்று அவர் சொல்லவில்லை. பின்னர் சீனப் போரின் காரணமாகப் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு விட்டார். ஆனால் அதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று சொன்னார்.



அதற்குப்பின் ‘திராவிடம்’ தமிழ்நாட்டிற்குத்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆரியப் பண்பாட்டு எதிர்ப்பைக் காட்டுவதற்குத் ‘திராவிடம்’ என்றும், நம்முடைய நாட்டின் பண்பாட்டைக் காட்டுவதற்கு ‘தமிழ்நாடு’ என்றும் பயன்படுத்தி வருகிறோம். எனவே இந்த ஆட்சியிலும், கடந்த கால ஆட்சியிலும் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்களையும் ஒன்றிணைத்து ‘திராவிட நாடு’ என்று யாருமே கேட்கவில்லை.

தமிழ்நாட்டுக்கும் ஆந்திராவிற்கும் இடையில் கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சனை வந்தபோது, தமிழ்நாடு ஆந்திராவை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறது. காவிரிப் பிரச்சனையில் கர்நாடகத்தை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறது. முல்லைப் பெரியாறு பிரச்சனையின் போது கேரளாவை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டு உரிமைதான் இன்றைக்கும் பேசப்படுகிறது. தமிழர் உரிமைதான் பேசப்படுகின்றது. ‘தமிழ்நாடு’ என்று அண்ணா ஆட்சிக் காலத்தில்தான் பெயர் சூட்டப்பட்டது.

ஆனால் ‘திராவிடம்’ என்று சொல்வது நம்முடைய மரபு வழித் தொடர்ச்சி. ஆரிய எதிர்ப்பு, திராவிடர் இயக்கம் - பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், சமஸ்கிருத ஆரியப் பண்பாட்டுக் கலாச்சார எதிர்ப்பு என்ற அடையாளத்திற்காகத்தான் ‘திராவிடம்’ என்ற பெயர் சேர்க்கப்பட்டது. இந்த வரலாற்றுப் பின்னணியைப் புரிந்து கொள்ளாமல் ஏதோ இந்த நான்கு மாநிலங்களும் ஒன்றாக இருப்பது போல இந்த ஆளுநர் உளறிக் கொண்டிருப்பது அவருடைய அறியாமையையும் வரலாற்றைப் பற்றிய எந்த அறிவும் அவருக்கு இல்லை என்பதையும் காட்டுகிறது. ●

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## உண்மையைச் சொன்ன ஒன்றிய அமைச்சர்!

தமிழ்நாட்டில் தாமரை மலரப்போகிறது, இதோ மலர்கிறது, அதோ மலர்கிறது, அடுத்து தாமரைதான் ஆட்சி செய்யப் போகிறது – என்ற காவிக் கும்பல்களின் வரட்டுக் குரல்களைக் கேட்டு சலித்துப் போய்விட்டார்கள் தமிழக மக்கள்.

இதற்கு நாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அவர்களிடம் இருந்தே இதற்குப் பதில் வந்து விட்டது.

பா.ஜ.கவைச் சேர்ந்த இந்திய ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பகவத் கிருஷ்ணராவ் காரத், அண்மையில் விருதுநகரில் பேசும் போது தெளிவாகச் சொல்லி விட்டார். என்ன சொன்னார்?

தமிழ் நாட்டைத் தவிர ஏனைய மாநிலங்களில் எல்லாம் பா.ஜ.க வளர்ந்து இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டில் மட்டும் வளர முடியவில்லையே, வளரவில்லையே என்று ஆதங்கப் பட்டுக் கொண்டே தமிழ்நாட்டில் பா.ஜ.கவின் உண்மை நிலவரத்தை மறைக்காமல் சொல்லிவிட்டார், அவர்.

உண்மைதான்! பா.ஜ.வினர் எவ்வளவுதான் கரணம் போட்டாலும் தமிழ்நாட்டு மக்கள் காவிகளை ஏற்க மாட்டார்கள்.

- தமிழக மக்களை இரண்டாந்தர மக்களாக நடத்துவது,
- மருத்துவத்தில் சிறந்த தமிழ் நாட்டின் மாணவர்களை நீட் தேர்வின் மூலம் அகற்ற முயற்சிப்பது,
- ஒன்றிய அரசுப் பணிகளில் வடநாட்டவர்களை நுழைத்துத் தமிழர்களைப் புறக்கணிப்பது,
- ஜீ.எஸ்.டி மூலம் கோடிக்கணக்காகத் தமிழக மக்களின் வியர்வையிலிருந்து வரி வசூலித்துக் கொண்டு, உரிய நிதியைத் தராமல் இழுத்தடிப்பது,
- இந்தியின் மூலம் சமஸ்கிருத ஆதிக்கத்தை நிறுவ, தமிழை அழிக்க முயல்வது,
- மதத்தால், சாதியால் மக்களிடம் கலவரத்தைத் தூண்டி குளிர்காய நினைப்பது,

– உள்ளிட்ட மக்கள் விரோத, பாசிச சக்தியான ஆர்.எஸ்.எஸ் / பா.ஜ.க / காவிக் கும்பல்களைத் தமிழர்கள் ஏற்க மாட்டார்கள், புறக்கணிப்பார்கள்.

காரணம் இது தமிழ்மண். தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சித்தாந்தத்தால் வேர் பிடித்தமண், பெரியார்மண்!

காவித்தாமரைகள் விதைக்கும் மதவெறியை, இங்குள்ளத் தமிழர்கள் ஏற்க மாட்டார்கள். தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு அமைத்தவர்களே அந்தப் பெருமக்கள்தான்.

காவிக்கு இங்கு வேலையுமில்லை; தாமரை, காய்வதைத் தவிர வேறு வழியுமில்லை !

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## மதவாதத்திற்கு எதிராகப் பேரவையின் மனிதச் சங்கிலி (11-10-2022)











# ஒருமைப்பாட்டைக் குலைக்கும் அமித்ஷா பரிந்துரை!

பொள்ளாச்சி மா. உமாபதி

வேதாளம் திரும்பத் திரும்ப முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டே இருக்கிறது. மனம் தளராத விக்கிரமாதித்தனும் அதைப் பிடித்து வந்து கொண்டே இருக்கிறார். 1938 தொடங்கி ராஜகோபாலாச்சாரியார் காலம் தொட்டு ஆதிக்க இந்தி தமிழ்நாட்டில் அடி எடுத்து வைப்பதும், மானமுள்ள தமிழர்களின் பேரெதிர்ப்பால் ஆதிக்க இந்தி அடித்து விரட்டப்படுவதும் வாடிக்கையாகி விட்டது.




இந்தியத் துணைக்கண்டத்தின் பன்முகத் தன்மையைச் சிதைக்கும் வகையில் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே உணவு, ஒரே பண்பாடு என்ற ஆர்.எஸ்.எஸ்ஸின் கருத்துகளை ஒன்றிய பாஜக அரசு செயல்படுத்த முற்படுகிறது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையிலான அலுவல் மொழி தொடர்பான நாடாளுமன்ற குழு அளித்துள்ள அறிக்கையில் ஒன்றிய அரசு நடத்தும் ஐஐடி, ஐஐஎம், மற்றும் ஒன்றிய பல்கலைக் கழகங்களான உயர்கல்வி நிறுவனங்களில் கட்டாயமாக இந்தி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது இந்தி பேசாத மாநிலங்களின் உணர்வுகளுக்கு எதிரானது.

இந்த அறிவிப்பு வெளியானதும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் தனது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். 1938 இல் ராஜகோபால ஆச்சாரியார், 1950 களில் ஜவகர்லால் நேரு , 1965 இல் லால் பகதூர் சாஸ்திரி, 1977 இல் மொரார்ஜி தேசாய், 1986 இல் ராஜீவ் காந்தி என்று இந்திய ஒன்றியத்தின் பிரதமர்கள் இந்தியை அலுவல் மொழியாக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தமிழ்நாட்டின் எதிர்ப்பின் மூலம் தவிடுபொடி ஆக்கப்பட்டுள்ளன.

மொழிப்போரில் பாய்ந்து வந்த துப்பாக்கித் தோட்டாக்களுக்கு மார்பு காட்டியும், தங்கள் தேக்குமரத் தேகங்களைத் தீயின் கொடிய நாக்குகளுக்குத் தின்னக் கொடுத்தும், நஞ்சருந்தியும், ஆதிக்க இந்தியைத் தடுக்கத் தங்கள் இன்னுயிரை ஈந்தவர்கள் பல நூறு பேர். ஆதிக்க இந்தியைத் தடுக்கவும் அன்னைத் தமிழைக் காக்கவும் இத்தனை பேர் இன்னுயிர் ஈந்த வரலாறு தமிழ்நாட்டுக்கு மட்டுமே உரித்தானது.

பழமொழி ஒன்று சொல்வார்கள் ; "ஆசை இருக்கிறது தாசில் பண்ண! அமைப்பு இருக்கிறது கழுதை மேய்க்க!" என்று. வடவர்களுக்குக் குறிப்பாக ஆர்.எஸ்.எஸ்,பாஜக தலைவர்களுக்கு சமஸ்கிருதத்தை இந்தியாவின் தலைமை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்றப் பேராசை உண்டு. ஆனால் சமஸ்கிருதம் தெரிந்தவர்கள் சில ஆயிரம் பேர்கள் கூடத் தொடவில்லை.

இந்தி மொழிக்குத் தொன்மைச் சிறப்போ, இலக்கண இலக்கிய வளமோ, அறிவியல் தொடர்போ எதுவும் கிடையாது. இந்தி மொழி பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு தோன்றிய மொழி.

துளசிதாசர் ராமாயணம் தவிர சொல்லிக் கொள்ளும் படியாக வளம் எதுவும் இந்தி மொழிக்கு இல்லை.

இந்தி மொழியின் மூலம் நவீன அறிவியல் பாடங்களையும், பொறியியல் மருத்துவத் தகவல் தொழில்நுட்பத் துறை பாடங்களையும் படிக்க முடியுமா? என்றால் முடியவே முடியாது.

இந்தி படித்தால் நாடு ஒற்றுமையாக இருக்கும். நாட்டின் ஒற்றுமை கருதி எல்லோரும் இந்தி படிக்க வேண்டும் என்கிறார்கள். எந்த ஒரு தனி மொழியும் ஒருமைப்பாட்டை வளர்க்காது.

இந்திய அரசியல் சட்டம் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 22 மொழிகளுக்கும் அவற்றிற்குரிய மதிப்பையும், மாண்பையும் கொடுத்துப் போற்றிப் பாதுகாத்தால் மட்டுமே இந்தியாவின் ஒற்றுமை பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும் அடக்கி ஆள நினைத்தால் அது நிச்சயம் ஒற்றுமைக்குக் கேடாகத்தான் முடியும்.

இந்தி இந்தியாவில் பெரும்பான்மையினர் பேசுகின்ற மொழி என்று சொன்னால் அதுவும் பிழையானது. அது வட மாநிலங்களில் உள்ள போஜ்பூரி, மைதிலி, அவதி, ராஜஸ்தானி, பீகாரி போன்ற பல மொழி பேசும் மக்களை எல்லாம் இந்தி பேசுபவர்களாகக் கணக்கில் காட்டிதான் பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி என்று புளுகி வருகின்றனர். சரியாகக் கணக்கெடுத்தால், இந்தி பேசும் மக்களை விட இந்தி பேசாத மக்களே பெரும்பான்மையானவர்கள்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்பது தமிழ்நாட்டில் மட்டும்தான் என்று கடந்த காலங்களில் கருதப்பட்டது. ஆனால் தற்போது கேரளா, கர்நாடகம், மேற்கு வங்கம் என நாடு முழுவதும் இந்தித் திணிப்பு எதிர்ப்பு உணர்வுகள் பெருகி வருகின்றன. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தி பேசாத மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அணுகி, இந்தி ஆதிக்கத்தின் பேராபத்துகளை விளக்கிச் சொல்லி, இந்தி எதிர்ப்பு எந்த அளவிற்குத் தேவையானது என்பதை விளக்கிச் சொல்லி இந்தித் திணிப்புக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்.

இது காலத்தின் கட்டாயம்!! ●

## கல்கத்தாவில்...



மேற்கு வங்கம் கல்கத்தாவில் ‘பெங்கால் பக்கா’ என்ற அமைப்பு முன்னெடுத்த இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் ஏந்திச் செல்லப்படும் பேறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் உருவப்படங்கள்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian